26.11.2024 MCOP No.100/2016

சாட்சி : PW 2 சேகர்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :** (3ம் எதர்மனுதாரர் வழக்கறிஞர்)

இறந்து போன சிவக்குமார் எனக்கு தெரிந்தவர் இல்லை. என்னை சாட்சியம் அளிக்க பாதிக்கப்பட்ட நபரின் வக்கில் அழைத்தார். குற்ற வழக்கில் திருவாடானை நீதிமன்றத்தில் என்னை சாட்சியாக விசாரித்தார்கள். நின்று கொண்டிருந்த டிப்பர் லாரியில் சிவக்குமார் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் அவர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்தார். விபத்து நடந்த இடம் நரிக்குடி விளக்கு ஆகும். அது தொண்டி - மதுரை நெடுஞ்சாலை ஆகும். அது கிழமேல் ரோடு ஆகும். நரிக்குடி விளக்கில் இருந்துதான் சிவக்குமார் வண்டி நிற்பதை கவனிக்காமல் மோதி விபத்துக்குள்ளாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. ஆம்புலன்ஸிற்கு நான் தகவல் சொல்லவில்லை. மருத்துவமனைக்கு நானும் கூட சென்றேன். நான்தான் மருத்துவமனைக்கு சேர்த்தேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. விபத்து நடந்த நேரம் காலை 10.30 முதல் 10.45 இருக்கும். குற்றவியல் வழக்கில் எனக்க நேரடியாக எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்அடிப்படையில் குற்றவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக தவறான தகவலை நீதிமன்றத்தில் சொல்லுகிறேன் என்று சொன்னால சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.